முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - DW1

O.S.No. 102/2017

பெயர்:திரு/திருமதி : செல்வராஜ் நாள். 29.03.2021

பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு நாள் 29.05.1965 1ம் பிரதிவாதி தன் தந்தை கிணறு வெட்டுவதற்காக பெற்ற கடன் தொகை செலுத்தியதற்கான ரசீது பிரதிவாதி சான்றாவணம் 2. நாள் 31.05.1965 1ம் பிரதிவாதி தன் தந்தை கிணறு வெட்டுவதற்காக பெற்ற கடன் தொகை செலுத்தியதற்கான ரசீது அசல் பிரதிவாதி சான்றாவணம் 3. நாள் 14.06.1965 1ம் பிரதிவாதி தன் தந்தை கிணறு வெட்டுவதற்காக பெற்ற கடன் தொகை செலுத்தியதற்கான ரசீது அசல் பிரதிவாதி சான்றாவணம் 4. நாள் 07.03.1941 வேலு கவுண்டர் லட்சுமியம்மாள் அவர்களுக்கு எழுதி கொடுத்த போக்கிய கடன் பத்திரம் பிரதிவாதி சான்றாவணம் 5. நாள் 10.05.1976 வேலு கவுண்டர் குமாரர்கள் பக்தவச்சலம் வெங்கடாசலம் குமாரத்தி பாப்பாத்தியம்மாள் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிக்கை பிரதிவாதி சான்றாவணம் 6. நாள் 05.08.1967 துரைசாமி கவுண்டர் குமாரர் வீரப்ப கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி நோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 7. நாள் 20.08.1971 ராமசாமி குமாரர் வடிவேல் கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி நோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 8. நாள் 05.11.1979 ராமசாமி குமாரர் வடிவேல் கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி நோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 9. நாள் 11.11.1981 தனபால் கவுண்டர் குமாரர் கோபால் கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி நோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 10.

நாள் 11.11.1981 பாலகிருஷ்ண கவுண்டர் குமாரர் ரங்கநாத கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி சோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 11. நாள் 11.11.1981 வெங்கடாஜலம் குமாரர் கண்ணக்கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் கவுண்டர் எழுதி கொடுத்து பைசல் ஆன பிராமிசரி சோட்டு அசல் பிரதிவாதி சான்றாவணம் 12 குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நடராஜ கவுண்டரிமிடருந்து நான் வாதி தரப்பு சான்றாவணம் 15 மூலமாக கிரையம் பெற்ற சொத்து நான் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சொத்தாகும். வா.சா.ஆ.16, வா.சா.ஆ.17, வா.சா.ஆ.20, வா.சா.ஆ.21 ஆகிய சொத்துக்களை நான் தனியாக என் வருவாயை கொண்டு கிரையம் பெற்று 8ம் பிரதிவாதி செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.23 மற்றும் வா.சா.ஆ.24 ஆகிய சொத்துக்களை நான் தனியாக என் வருவாயை கொண்டு கிரையம் பெற்று 9ம் பிரதிவாதி கார்த்திகேயனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன். 10.04.2014ல் நான் தனியாக என் வருவாயை கொண்டு கிரையம் பெற்று புகழேந்தி என்பவருக்கு சில அயிட்ட சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளேன். செந்தில்குமார், புகழேந்தி மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் பட்டா மாறுதல் செய்து கொண்டார்களா என்றால் அவர்கள் அனுபவித்து வந்தார்கள்.